எம்.சி.ஓ.பி. எண்: 4660/2006 தேதி : 18.3.2024

ம.சா. : 1

பெயர் : திரு. சண்முகம்

த/பெ. : திரு. மாசிலாமணி

வயது : 80

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2-ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதனை குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேலும், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 14 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 1 முதல் 4, 6 முதல் 10 மற்றும் 14-வரையிலான ஆவணங்களை 2-ம் எதிர்மனுதாரரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

தொழில் மற்றும் வருமானம் காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகனின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. குடும்பச்சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன், அது மசாஆ 10 ஆகும். மசாஆ 2-ஆன ஆவணத்தின்படி இறந்தவரின் விலாசம் சென்னை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அவர் சென்னையில் தான் வேலைப்பார்த்தார். நானும் சென்னை விலாசத்தை தான் என்னுடைய மனுவில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சென்னையில் வசிக்கும் நீங்கள் ஆந்திராவில் குடும்பச்சான்றிதழை வாங்கியுள்ளீர்கள் என்பதால் அது செல்லாது என்றால், ஆந்திரா மாநிலம் என்னுடை பூர்விகம். என் மகன் 10 வருடமாக சென்னையில் இருந்தார். எனது மகனுக்கு சென்னையில் குடும்ப அட்டை கிடையாது. எனது மருமகள் எனது மகன் இறந்த பிறகு வேறு திருமணம் செய்து கொண்டார், அவருடைய வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் காரணமல்ல என்றால் சரியல்ல. மசாஆ 10-ஆன ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இறந்தவரை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.